# GOVERNMENT ARTS COLLEGE (AUTONOMOUS)

(Re-Accredited with 'A' Grade by NAAC and Affiliated to Bharathidasan University, Tiruchirapalli)

## KARUR – 639 005.

**Date: 09-04-2021**

## சுற்றறிக்கை

**01.** அரசு கலைக் கல்லூரி(தன்னாட்சி) கரூர் - ஏப்ரல் **2021** இரட்டைப் பருவ எழுத்துத் தேர்வுகள் **Online** (இணையவழி) மூலம் **15-04-2021** முதல் **07-05-2021** வரை நடைபெற உள்ளது.

**02.** ஆன்லைன் எழுத்துத் தேர்வுகள் 75 மதிப்பெண்களுக்கு கீழ்கண்டவாறு நடைபெற உள்ளது. மதிப்பெண்கள் : பகுதி - அ **(10X2=20)**

பகுதி - ஆ **(5X5=25)**

பகுதி - இ **(3X10=30)**

தேர்வு நேரம் :**03** மணிநேரம்.

காலை **09.30 AM to 12.30 PM**

மாலை **02.00 PM to 05.00 PM**

**03.** துறைத்தலைவர்கள் ஆன்லைன் எழுத்துத் தேர்வு நடத்துவதற்கு ஏதுவாக தேர்வு கண்காணிப்பாளர்கள் அடங்கிய குழு ஒன்றை ஏற்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். துறைத்தலைவரை உள்ளடக்கிய தேர்வு கண்காணிப்புக் குழு ஆன்லைன் தேர்வு நடத்த தேவையான வாட்சப் **(Whatsapp)** குழுவை ஏற்படுத்துதல் மற்றும் மாணக்கர்களின் மின்அஞ்சல் முகவரியை சேகரித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

**04.** துறைத்தலைவர்கள் தேர்வு நடைபெறும் ஒவ்வொருநாளும் அந்த பாடப்பிரிவிற்குரிய பொறுப்பாசிரியர் மூலமாக வருகைப்பதிவினை தயார் செய்து தேர்வுநெறியாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

**05.** மாணக்கர்களுக்கு வினாத்தாள் தேர்வு துவங்கும் நேரத்திற்கு 10 நிமிடம் முன்பாக கிடைத்திடுமாறு துறைத்தலைவர்கள் பொறுப்பாசிரியர்களை அறிவுறுத்துதல் வேண்டும்.

**06.** மாணாக்கர்கள் எழுத்துத் தேர்வினை **A4** வெள்ளை நிறத் தாளில் எழுதுதல் வேண்டும். முதல் பக்கத்தின் மேற்புறத்தில் மாணாக்கருடைய பதிவு எண், தேர்வு தாளின் தலைப்பு, தேர்வு தாளின் பாடக் குறியீடு, தேர்வு நடைபெறும் நாள் மற்றும் மொத்தம் எழுதிய பக்கங்கள் ஆகியன இருத்தல் வேண்டும். விடைத்தாளின் இரண்டாவது பக்கத்திலிருந்து மாணாக்கருடைய பதிவு எண் மற்றும் கையொப்பம் இருக்குமாறு அறிவுறுத்துதல் வேண்டும். (பக்கத்தின் மேற்புற வலது மூலையில் மாணாக்கருடைய பதிவு எண், தாளின் கீழ்புற வலதுமூலையில் மாணாக்கரின் கையொப்பமும் இருக்குமாறு தெரிவித்தல் வேண்டும்).

07. மாணாக்கர்கள் காலை நேரத்தேர்வு முடிந்தபின்பு மதியம் 3.00 மணிக்குள்ளும், மதியத் தேர்வு முடிந்த பிறகு மாலை 7.00 மணிக்குள்ளும் தேர்வு எழுதிய விடைத்தாளினை துறையின் மின்னஞ்சல் முகவரிக்கு **(Soft Copy)** மென்நகலாக அனுப்ப வேண்டும்.

08. மாணாக்கர்கள் தாங்கள் தேர்வு எழுதிய விடைத்தாள் புத்தகத்தினை அனைத்து தேர்வுகளும் முடிந்த பின் நூல் கொண்டு கட்டி உறையிலிட்டு துறைத்தலைவருக்கு கூரியர் மூலமாகவோ அல்லது விரைவுத் தபால் மூலமாகவோ அல்லது பதிவு தபால் மூலமாகவோ மூன்று நாட்களுக்குள் கிடைக்கும்படி அனுப்ப அறிவுறுத்துதல் வேண்டும்.

| | |
|---|---|
| CONTROLLER OF EXAMINATIONS i/c | PRINCIPAL |
| CONTROLLER OF EXAMINATIONS<br>GOVERNMENT ARTS COLLEGE.<br>(AUTONOMOUS)<br>KARUR-639 005 | Principal<br>Government Arts College (Autonomous)<br>Thanthonimalai,<br>KARUR - 5. |